**<u>முதலாவது கூடுதல்  சார்பு நீதிமன்றம், விழுப்புரம்</u>**
**<u>O.S. No. 334/2022</u>**

**<u>Witness DW 2</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குணசேகரன் | தொழில் | |
| த/பெ | ரங்கநாதன் | வயது | |
| ஊர் | | தேதி | 24.03.2026 |
| மாவட்டம்; | | | |

இன்று (24.03.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**<u>வாதி தரப்பில்குறுக்கு விசாரணை</u>**

**<u>சத்தியமாக சொல்கிறேன்</u>**

நான் வடகுச்சிபாளையத்தை சேர்ந்தவர். நான் இளநிலை கணக்கியல் பட்டப்படிப்பு படித்துள்ளேன். வாதி மகேஷ் என்பவரை எனக்கு தெரியும் அவர் எனது பக்கத்துவீட்டுக்காரர். அவர் எனது வீட்டிற்கு கிழக்கு பக்கத்தில் இருக்கிறார். 1 முதல் 4வரையிலான பிரதிவாதிகளின் 1வது பிரதிவாதியான சிவகாமி என்பவர் எனது தாயார். செல்வி என்பவர் எனது அக்கா.  நான் 3வது பிரதிவாதி என்றால் சரி. 4வது பிரதிவாதி பாக்கியலட்சுமி என்பவர் எனது தங்கை. பிரதிவாதிகள் தரப்பில் நான் மட்டும் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரி. என்னுடன் அம்மாவும் வந்துள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் எனக்கு முன்னர் எனது அம்மா மற்றும் அக்காவை விசாரணை செய்யவில்லை என்றால் சரி. வாதி இந்த வழக்கினை என்மீதும் எனது அம்மா, அக்காள், தங்கை மீது வழக்குசொத்தானது வாதிக்கு உரிமையானது என்றும் அதில் நாங்கள் இடையூறு செய்யக்கூடாது என கூறி இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. சொத்தானது எங்களது பாட்டனார் பாவாடை கவுண்டர் என்பவரது சொத்து. பாவாடை கவுண்டர் என்பவரது அப்பாவின் பெயர் பூங்காவன கவுண்டர். பாவாடை கவுண்டர் என்பவரதுமனைவி பெயர் பூரணி அம்மாள். பாவாடை கவுண்டர் மற்றும் பூரணி அம்மாள் ஆகியோருக்கு பிறந்தவர்கள் தான் சுப்ரமணி, ரங்கநாதன், நாவம்மாள். அதில் ரங்கநாதன் என்பவர் எனது தகப்பனார் என்றால் சரி. ரங்கநாதன் என்பவரது மனைவி தான் 1வது பிரதிவாதி சிவகாமி என்றால் சரி. 2 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் ரங்கநாதன் மற்றும் சிவசாமி என்பவரது

மகள்கள் மற்றும் மகன் என்றால் சரி. சுப்ரமணி என்பவரதுமனைவி புஷ்பா என்றால் சரி. புஷ்பா மற்றும் சுப்ரமணி ஆகியோருக்கு பிறந்தவர்கள் புனிதா, வளர்மதி, முருகன். சொத்துக்கள் ஆதியில் பாவாடை கவுண்டர் என்பவரது பூர்வீக மற்றும் சுய சம்பாத்திய சொத்துக்கள். 1970 ம் வருடம் பாவாடை கவுண்டர் என்பவர் வழக்கு சொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்துக்கொண்டார் என்றால் அது எனக்கு தெரியாது. பாகபிரிவினையின் போது நான் பிறக்கவில்லை என்றால் சரி. அதனால் எனக்கு தெரியாது என்றால் சரி. வழக்கு சொத்துக்கள் மற்றும்இதர சொத்துக்கள் எனது அப்பா ரங்கநாதன் மற்றும் சுப்ரமணிய கவுண்டர் ஆகியோர் 23.03.1970 ம் தேதி பாகம் பிரித்துக்கொண்டனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பாகபிரிவினையில் எ அட்டவணை சொத்துக்கள் எனது பெரியப்பா சுப்ரமணி என்பவருக்கம், பி அட்டவணை சொத்துக்கள் எனது அப்பாவிற்கும் வழங்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பாக பிரிவினை பத்திரத்தை நான் பி.சா.ஆ 1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. நான் பாகபிரிவினை வழக்கினை நான் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் விழுப்புரத்தில் அசல் வழக்கு எண். 289/2013 என்ற வழக்கை சுப்ரமணியன் மற்றும் அவரது வாரிசுகள் மீது தாக்கல் செய்திருந்தேன். அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை நடந்துகொண்டிருக்கிறது. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 289/2013 01.02.2017 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் 2021 ம் வருடம் அதனை மறுதிறப்பு செய்துள்ளோம். நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண். 2013 வருடத்திலிருந்து பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்யாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் முதலில் எனது வழக்கினை அரசு வழக்கறிஞர் எடுத்து நடத்தி வந்தார் பின்னர் அரசு வழக்கறிஞர் நடத்த கூடாது என்றுவிட்டுவிட்டார். அரசு வழக்கறிஞர் நடத்தக்கூடாது என நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் குறித்து 1970 ம் வருடமே பாகம் பிரித்துக்கொண்டபடியால் இந்த வழக்கினை தாக்கல் செய்து உரிமை கோர எனக்கு எந்த வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பாக பத்திரம் எழுதியது எனக்குதெரியாது. அதில் எனது அப்பா கையொப்பம் செய்யவில்லை. பாகபிரிவினை பத்திரத்தில் எனது அப்பாவின் கையொப்பம் இல்லை என்பதற்காக நான் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பாகபிரிவினை ஏற்படவில்லை என்றும் அந்த பாகபிரிவினை பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றும் ஏதாவது வழக்கினை தாக்கல் செய்துள்ளளேனா என்றால் 2013 ம் வருடம் வழக்கு

தாக்கல் செய்திருந்தேன். அவ்வாறு நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றுசொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண். 289/2013 என்ற வழக்கின் வழக்குரையை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றுசொன்னால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். அந்த வழக்குரையை பார்வையிட்டால் எனது அப்பா மற்றும் பெரியப்பா இடையே நடைபெற்ற 23.03.1970 தேதியிட்ட பாகபிரிவினை ரத்து செய்ய வேண்டும் என்று பரிகாரம் கோரியுள்ளேனா என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரி. பி.சா.ஆ 3ல் சுப்ரமணி கவுண்டர் என்பவர் அடைய வேண்டிய எ அட்டவணை சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. 2வது நபர் ரங்கநாதன் என்பவர் அடைய வேண்டிய பி அட்டவணை சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. எ அட்டவணை சொத்திலும் ஜக்குபந்தி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. எ அட்டவணை சொத்தில்கிராம நத்தம் சர்வே எண். 216 ஒரு ஏக்கர் 20 செண்ட் நிலத்தில் பிள்ளையார் கோவில் வீதிக்கும் தெற்கு, காத்தவராய கவுண்டர் வீட்டிற்கு வடக்கு, பொதுவழி நடை சந்துக்கு மேற்கு, பால்சாமி கவுண்டர் வீட்டிற்கு கிழக்கு, இதன் மத்தியில் கி.மே ஜாதியடி 12, தெ.வ. 31 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்சரி அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண். 217/1 10 செண்ட் நிலத்தில் மேற்புறம் பாதைக்கு கிழக்கு,தெற்கு கேசவகவுண்டர் புஞ்சைக்கு வடக்கு, தனபால் கவுண்டர் புஞ்சைக்கு மேற்கு இதன் மத்தியில் கி.மே ஜாதியடி 25, தெ.வ. 55 அடி என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்சொன்ன 2 இன சொத்துக்கள் எனது அப்பாவின் பாகத்திற்கு வந்தது என்றால் சரி அது இரண்டும் புறம்போக்கு நிலங்கள். எனது அப்பா ரங்கநாதன் என்பவர் அவருக்கு கிடைக்கப்பெற்ற சொத்தினை பூரணி அம்மாள் என்பவருக்கு 217/1 10 செண்ட்டில் வறாக கி.மே ஜாதியடி 31, தெ.வ. 46 அடி கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி மீண்டும் சாட்சி அது பற்றி எனக்குதெரியாது என்று சாட்சியம் அளிக்கிறார். 19.07.1925 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் **வா.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது அப்பா கிரையம் கொடுத்தநிலம் புறம்போக்கு வகையில் சேர்ந்தது இல்லை என்றாலும்அது எனது அப்பாவிற்கும் பெரியப்பாவிற்கும் நடைபெற்ற பாகபிரிவினைவாயிலாக எனது அப்பாவிற்கு பி அட்டவணை சொத்தாக கிடைக்கப்பெற்றது என்றுசொன்னால் இல்லை அது புறம்போக்கு வகையை சேர்ந்தது. எனது தாத்தா பாவாடை கவுண்டர் என்பவர் பூரணி அம்மாள் என்பவருக்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரி. அதிலுள்ள

சொத்தில் கிராம நத்தம் சர்வே எண் 208/2 2 ஏக்கர் 73 செண்ட் நிலத்தில் கி.மே ஜாதியடி21, தெ.வ. 68அடி என்றால் சரி. அந்த சொத்துக்களுக்கும் இந்த வழக்கு சொத்துக்களுக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றுசொன்னால் சம்மந்தம் உள்ளது. பாவாடை கவுண்டர் கிரையம் வாங்கிய 17.02.1957 பத்திரத்தில் கந்தகவுண்டர் என்பவரிடம் இருந்து எனது தாத்தா கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரி. அது எனது தரப்பில் பி.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. சர்வே எண். 216 ல் பிள்ளையார் கோவில் வீதியில் வட சரகில் மகாதேவன் பாகத்திற்கு வடக்கு, சுப்பராய கவுண்டர் வகையறா தோட்டத்திற்கு கிழக்கு, ஊரக வாய்க்காலுக்கு தெற்கு, தங்கள் பாக தோட்டத்திற்கு மேற்கு இதன் மத்தியில் கி.மே ஜாதியடி 12, தெ.வ. 41 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. பாவாடை கவுண்டர் என்பவர் 1962 ம் வருடம் இறந்துவிட்டார். பூரணி அம்மாள் பாட்டி 1987 ல் இறந்துவிட்டார். அதற்கான இறப்பு சான்றிதழ்களை நான் தாக்கல் செய்யவில்லை வாரிசுசான்றிதழை நான் தாக்கல் செய்துள்ளேன். எனது தாத்தா பாவாடை மற்றும் பூரணி அம்மாள் இறந்த பிறகு சொத்துக்களை எனது தகப்பனாரான ரங்கநாதன் மற்றும் பெரியப்பாவான சுப்ரமணி என்பவரும் அனுபவித்து வந்தனார் என்றுசொன்னால் சரி.

**மேலும் குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/-M.S. Varalakshmi)
I Additional Subordinate Judge,
Villupuram